முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் தானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

22.04.2019, திங்கட்கிழமை

1. **சற்குருவாக வந்த குருநாதா**
**சங்கடம் போக்கி காத்தருள**
**சற்குருவாக சரவணச் சுடராக**
**சன்மார்க்க நெறி கொண்டு வந்த அரங்கா**
2. அரங்கா உன் பெருமை கூறி
அகிலமதில் நித்ய பிரசன்ன ஆசி
வரங்களென **விகாரி தகரின் திங்கள்**
**வல்லமைபட நவதிகதி சோமவாரம்**
**(விகாரி வருடம் சித்திரை மாதம் 9ம் நாள் 22.04.2019, திங்கட்கிழமை)**
3. **வாரமதில் தானந்தர் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம்பெற
சோரமின்றி உலக மக்கள் வாழ
சுத்தநெறி ஏற்று வாரீர் என அழைக்கும்
4. அழைக்கும் அரங்க ஞானியே
அகிலம் காக்கும் உயர் குரு நீ
வாழையடி வாழையாக ஞானிகள்
வரம் தந்து மக்களை வழிநடத்திட
5. வழிமொழிந்து ஏற்று வரும் மக்கள்
வறுமை சத்ரு கட்டம் விலகி
பழிபாவம் நேரா பாதுகாப்புமிக்க
பண்புள்ள ஞான வாழ்வாக கண்டு சிறப்பர்
6. சிறப்பான கல்வி ஞானமுடன்
சிந்தை தெளிவு மனோ பலமுடன்
மறுப்பில்லா பொருள் வளமுடன்
மாதன தேட்டு வளமும் கூடி
7. கூடியே செல்வந்தர்களாகவும்
குருராஜன் உயர்சீடர்களாகவும்
நாடியே தயவை பெருக்கி
ஞானிகளாகவே பிறந்திருப்பர்
8. இருக்கவே அரங்கனை தேடி
இணைந்து தொண்டில் கலந்து
கருத்தாக அறப்பணி செய்வதுடன்
கட்டாயம் பொருளுதவி செய்து
9. செய்துமே தொடர்ந்து முழுமதியில்
செப்பிட அரங்கர் ஆசிபெற
மெய்ஞான யோகநிலை கூடி
மேலவர் மெச்சும்படி உங்கள் வாழ்வு மாறும்

10. வாழ்வு சிறக்கும் எதார்த்த வழி
வல்லமையான சன்மார்க்க வழி
ஊழ் வெல்லும் உண்மை வழி
உயர்வாய் உலக மக்கள் ஏற்றுவர
11. வருகவே அரங்க ஞானி கொள்கை
வளர்ந்து பரவி கலியுகத்தில்
முருகன் ஆளும் ஞானயுகத்தின்
முழுமை மாற்றமாக சடுதி காணும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் தானந்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

இவ்வுலகை நீதிநெறி வழியிலும் தர்மத்தின் பாதையிலும் வழிநடத்தி காக்கவே சற்குருவாக இவ்வுலகினில் முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்த அரங்கமகா தேசிகனே மக்களின் சங்கடங்களைப் போக்கி காத்தருள வந்திட்ட மகா ஞானியே சரவணஜோதி சுடராக வந்துதித்து உலகினில் சன்மார்க்க நெறியினை கொண்டு வந்து மக்களை நன்னெறி வழி செலுத்தும் மகா ஞானியே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 9ம் நாள் 22.04.2019, திங்கட்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே தானந்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் தானந்தர்.

குற்றமற்ற தர்ம வாழ்வினை வாழ்ந்திடவே உலக மக்களுக்கு சுத்தநெறிதனை அருளி அவர்களை அழைக்கின்றார் அரங்கமகானும். உலகோரை கடைத்தேறிட அழைக்கும் அரங்கமகா தேசிகனே இவ்வுலகின் காப்பாளர். அவரே உலகைக் காக்கும் உயர் குரு ஆவார். வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினராகிய ஞானிகளின் வரத்தினை தந்து மக்களை வழிநடத்தி வருகின்றபடியினாலே அரங்கனை முழுமனதாய் ஏற்றுக் கொண்டு அரங்கனை பின்தொடர்ந்து வருகின்ற மக்களை வறுமை எனும் கொடும் துன்பம் அணுகாது, எதிரிகளால் உண்டான துன்பங்களும் விலகி பழிபாவம் சூழாது பாதுகாப்புமிக்க பண்புள்ள ஞானவாழ்வாக வாழ்ந்து சிறப்படைவார்கள்.

நல்ல கல்வி உயர்வும், ஞானத்துடன் சிந்தை தெளிவும் பெற்று உடல் பலமும் மனோபலமும் பெற்று தடையற்ற பொருள் வளத்துடன் பெரும் வருவாயும் பெருந்தனச் சேர்க்கையும் உண்டாகி செல்வந்தர்களாக வாழ்வதுடன் அரங்கரின் சீடர்களாகவும் ஆகி அரங்கனை பின் தொடர்ந்து அரங்கனின் தயவினை பெருக்கிக் கொண்ட சீடர்களாக ஆகி ஞானிகளாக ஆகும் தகுதியையும் பெற்றிருப்பார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரைத் தேடி இணைந்து அரங்கன் ஆற்றும் தொண்டுகளில் கலந்து மனம் உவந்து தொண்டுகளைச் செய்து அரங்கரின் தானதரும அறப்பணிகளுக்கு பொருளுதவிகள் செய்து வருவதுடன், அரங்கமகா தேசிகனார் உலக நலம் கருதி மாதந்தோறும் பௌர்ணமி தினத்தினிலே நடத்தும் ஞானிகள் பூஜைகளிலே கலந்து கொண்டு ஞானிகளையும், ஞானபண்டிதனையும், அரங்கமகானையும் வழிபாடுகள் செய்து ஆசி பெற்றிட்ட அவர்களுக்கு மெய்ஞான நிலை பெருகி, யோகநிலைகளும் பெருகி ஞானிகள் மெச்சும்படியாக உங்களது வாழ்வு உயர்வடையும். உங்களது வாழ்வு யதார்த்தமாய் சிறப்புடன் எளிமையானதாய் சன்மார்க்க வழியில் செல்லும் ஞானவாழ்வாய் முன் ஜென்ம பாவங்களான ஊழ்வினைகளையும் வெல்லும் உண்மை வழியாய் உயர்வாய் அமைந்து சிறக்கும்.

இவ்விதம் உலக மக்கள் எல்லாம் அரங்கனைப் பின்தொடர ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் கொள்கைகள் உலகமெலாம் பரவி மக்களிடையே பெருகி வளர்ந்து முருகப்பெருமானே நேரில் தோன்றி ஆட்சி செய்கின்ற ஞானஆட்சி மலர்ந்து உலகமெலாம் விரைந்து ஞானயுகமாக ஆகிடும் எனக் கூறுகிறார் மகான் தானந்தர்.

–சுபம்–